# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අති විශෙෂ   அதி விசேஷமானது**

**අංක 2366/08 – 2024 ජනවාරි මස 08 වැනි සඳුදා – 2024.01.08**

*2366/08 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு சனவரி மாதம் 08 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) – பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**2022 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, தனிப்பட்ட தரவுப் பாதுகாப்புச் சட்டம்**

*1 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் கீழான கட்டளை*

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 44 ஆம் உறுப்புரையின் (3) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2022 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, தனிப்பட்ட தரவுப் பாதுகாப்புச் சட்டத்தின் 1 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவினால் எனக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு, சனாதிபதி மற்றும் தொழில்நுட்ப அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க ஆகிய நான், இக்கட்டளை மூலம் -

(அ) மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் பாகம் VI, VIII, IX மற்றும் X இன் ஏற்பாடுகள் நடைமுறைக்கு வர வேண்டிய தேதியாக 2023 திசெம்பர் 1 ஆந் தேதியையும், அத்துடன்

(ஆ) மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் பாகம் I, II, III மற்றும் VII இன் ஏற்பாடுகள் நடைமுறைக்கு வர வேண்டிய தேதியாக 2025 மாச்சு 18 ஆந் தேதியையும்,

நியமிக்கின்றேன்.

**ரணில் விக்கிரமசிங்க,**
சனாதிபதி மற்றும் தொழில்நுட்ப அமைச்சர்.

கொழும்பு,
2023, திசெம்பர் 29.

EOG 01 - 0072

G41214 – 07 (2024/01)    இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.

இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.